Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**
Case No. CC. 856 /2025
**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. அஞ்சலை | **தொழில்** | கூலிவேலை |
| **த/க பெயர்** | திரு. ஜெயபால் | **கிராமம்/ ஊர்** | சேலம் |
| **வயது** | 60 | **மாவட்டம்** | சேலம் |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1,2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 11th day of March 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை–**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் தான் சம்பவத்தின் போது எனது நகையை பறித்து சென்றவர்கள். சுமார் 6 மாதங்களுக்கு முன்பு நான் சென்னைக்கு சென்று விட்டு இரயிலில் பயணம் செய்தபோது, கழிவறைக்கு சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் எனது கழுத்தில் இருந்த 3 சவரன் செயினை பிடித்து இழுத்து கொண்டு இரயிலில் இருந்து குதித்து தப்பி ஓடிவிட்டனர். அப்போது உடனிருந்த ஒரு நபர் ஜோலார்பேட்டை வந்தவுடன் இரயில்வே காவல் நிலையத்தில் புகார் அளிக்கும் போது உடனிருந்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். **(அந்த புகார் என்னால் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) அதன் பின்னிட்டு 2 மாதம் கழித்து ஜோலார்பேட்டை காவல் நிலைத்தார் கொடுத்த தகவலின் பேரில் நான் காவல் நிலையம் சென்று எதிரிகளை

அடையாளம் காண்பித்தேன். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து வழக்கு சொத்தை பெற்றுகொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள 3 சவரன் தங்ககாசை பெற்று சென்றேன். **(அது அ.சா.பொ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். எனக்கு பார்வை குறைபாடு உள்ளது என்றால் ஒரு கண்ணில் மட்டும் லேசாக தெரியும். நான் பயணம் செய்த இரயில் வண்டி எண் தெரியாது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் பெற்று சென்றதும், நான் தொலைத்ததாக கூறும் நகையும் வேறு வேறு என்றால் சரிதான். எனக்கு சம்பவடம் நடந்த தேதி ஞாயாபகமில்லை. நான் அணிந்திருந்த தங்க செயின் என்னுடையது தான் என்பதற்கு இரசீது ஏதாவது போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த சமயத்தில் எதிரிகள் அந்த இரயிலில் பயணிக்கவில்லை என்றால் சரியல்ல, (இரண்டு எதிரகளும் நகையை பறித்தபோது எவ்வாறு நான் பொய்யாக கூறுவேன் என்று சாட்சி ஆதங்கத்துடன் கூறுகிறார்)

**மறுவிசாரணை –** இல்லை

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness    Judicial Magistrate No.III(FAC)<br>Tirupathur. |